# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

## நடப்பு நிகழ்வுகள்

**நாள்: 19 /06/2024**



# தமிழ்நாடு

## கே. சந்துரு குழுவின் பரிந்துரைகள் :

- **ஆகஸ்ட் 2023** இல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரியில் ஒரு இடைநிலை வகுப்பைச் சேர்ந்த மாணவர்களால் பட்டியலின வகுப்பைச் சேர்ந்த இரண்டு பள்ளிக் குழந்தைகள் கொடூரமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து **நீதிபதி சந்துரு தலைமையிலான ஒருநபர் குழு** அமைக்கப்பட்டது.



- இந்த தனிநபர் குழு **பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தங்களின் சாதியைக் குறிக்கக்கூடிய வண்ண கைகயிறுகள், வளையங்கள்** அணிவதை தமிழ்நாடு அரசு தடை செய்ய பரிந்துரைத்துள்ளது.

## தமிழ்நாட்டின் எட்டு புதிய தொல்பொருள் அகழ்வாராய்ச்சி இடங்கள்:

- தமிழ்நாடு முதலமைச்சர் மாநிலம் முழுவதும் எட்டு இடங்களில் இணைய வழியில் புதிய தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நிகழ்வை தொடங்கினார்.
- அகழ்வாய்வு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் :
  - ✓ சிவகங்கை மாவட்டத்தில் உள்ள **கொந்தகை**
  - ✓ விருதுநகர் மாவட்டத்தில் உள்ள **வெம்பகோட்டை**
  - ✓ திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள **கில்னாமண்டி**

- ✓ புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள **பொர்பனைக்கோட்டை.**
- ✓ தென்காசி மாவட்டத்தில் உள்ள **திருமலப்புரம்.**
- ✓ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள **சென்னனூர்.**
- ✓ திருப்பூர் மாவட்டத்தில் உள்ள **கொங்கல்நகரம்.**
- ✓ கடலூர் மாவட்டத்தில் உள்ள **மருங்கூர்.**

## <u>சென்னை ஆறுகள் - தேசிய பசுமை தீர்ப்பாயம் :</u>

**நிகழ்வு :**

சென்னை ஆறுகளை துமைப்படுத்த தமிழக **அரசுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின்** தென்மண்டல அமர்வு உத்தரவிட்டுள்ளது.

**தேர்வுக்கு தேவையானவை :**

- **சென்னையில் உள்ள ஆறு :** கூவம் ஆறுஅடையாறு, கொசத்தலை ஆறு.
- **கொசத்தலையாறு**
  - ✓ கொசத்தலையாறு **136 கிலோமீட்டர் நீளம்** கொண்டது.
  - ✓ இது திருவள்ளூர் மாவட்டம் **பள்ளிப்பட்டு** அருகே உருவாகின்றது.
  - ✓ இதன் நீர்ப்பிடிப்பு பகுதி **வேலூர் (வட ஆற்காடு), சித்தூர், , திருவள்ளூர் மற்றும் சென்னை**



**மாவட்டங்களை** உள்ளடக்கியது.

- ✓ **தாமரைப்பாக்கம்** மற்றும் **வல்லூரில்** இந்த ஆற்றின் குறுக்கே இரண்டு **தடுப்பு அணைகள்** உள்ளன.
- ✓ இது **சென்னை பெருநகரப் பகுதியில் 16 கிலோமீட்டர் தூரம்** வரை பாய்கிறது.
- ✓ இதன் வடக்கு துணை நதியான **நகரி ஆறு** ஆந்திரப் பிரதேசத்தின் சித்தூர் மாவட்டத்தில் உற்பத்தியாகிறது. இது பூண்டி நீர்த்தேக்கத்தில் கொசஸ்தலையாறுடன் இணைகிறது.
- ✓ சித்தூர் மாவட்டம், நகரி படுகையில் உள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து கிருஷ்ணா நதி நீர் வழங்குவதற்காக **கேலேரு- நகரி பாசனத் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- **கூவம் நதி**
  - ✓ கூவம் நதி, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள **கதம்பதூர் எனும் கிராமத்தில்** உருவாகிறது.
  - ✓ இந்த நதி சுமார் **72 கி.மீ நீளம்** கொண்டது, சென்னை நகரில் 32 கி.மீ. நீளம் பாய்கின்றது.
  - ✓ இது **திருவல்லிகேனி நதி** என்றும் அழைக்கப்படுகிறது
  - ✓ இந்த நதி சென்னை நகரத்தை வடக்கு சென்னை மத்திய சென்னை என பிரிக்கிறது.
- **அடையாறு நதி** :
  - ✓ அடையாறு நதி ஸ்ரீபெரும்புதூர் அருகில் **மாலாய்ப்பட்டிலிருந்து** (மணிமங்கலம் கிராமம்) தொடங்குகிறது.
  - ✓ செம்பராம்பக்கம் ஏரியிலிருந்து வெளியேறும் நீர் திருநீர்மலையில் இந்த ஆற்றில் இணையும்.

- ✓ **42.5-கிலோமீட்டர்** (26.4 மைல்) நீளமுள்ள இந்த நதி சென்னையின் கழிமுக சுற்றுச்சூழல் (Estuarine Ecosystem) அமைப்பிற்கு பங்களிக்கிறது.
- ✓ சுமார் 120 ஹெக்டேர் (300 ஏக்கர்) பரப்பளவைக் கொண்ட இந்த **அடையாறு முகத்துவாரம் 1987 இல் பாதுகாக்கப்பட்ட வனஉயிர் காப்பகமாக** மாற்றப்பட்டது.

- **தேசிய பசுமை தீர்ப்பாயம் :**
  - ✓ தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) என்பது ஒரு சட்டரீதியான அமைப்பாகும்.
  - ✓ இது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பிற இயற்கை வளங்கள் தொடர்பான வழக்குகளை விரைவாக தீர்த்துவைக்க தோற்றுவிக்கப்பட்டது .
  - ✓ இது **தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம் - 2010** ன் கீழ் அமைக்கப்பட்டது.
  - ✓ ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திற்குப் பிறகு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒரு சட்டரீதியான அமைப்பை அமைத்த உலகின் மூன்றாவது நாடு இந்தியா.

.

# அறிவியல் தொழில்நுட்பம்

## பயோ டீசல் உற்பத்திகான வினையூக்கி ( Catalyst for Bio diesel production ) :

- **பயோடீசல்** என்பது காய்கறி எண்ணெய்கள், விலங்குகளின் கொழுப்புகள் அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட உணவக கிரீஸ் ஆகியவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க, மக்கும் எரிபொருள் ஆகும்.
- இந்தியா, சீனா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகள் குழு சுற்றுச்சூழலுக்கு உகந்த பயோடீசலை உற்பத்தி செய்வதற்கான செலவு குறைந்த, **நீர் விரட்டும் பண்பை கொண்ட வினையூக்கியை** (Catalyst) உருவாக்கியுள்ளது.
- **கோள சூப்பர்ஹைட்ரோபோபிக் செயல்படுத்தப்பட்ட கார்பன் வினையூக்கி : ( Spherical superhydrophobic activated carbon catalyst )**
    - ✓ இந்த வினையூக்கிகள் தாமரை இலைகள் போன்ற இயற்கை மேற்பரப்புகளின் **நீர் விரட்டும் பண்புகளை** பிரதிபலிக்கின்றன.
    - ✓ இது பயோமாஸ் (செல்லுலோஸ்) இலிருந்து பெறப்பட்டது.
    - ✓ சுற்றுச்சூழல் ரீதியாக தீங்கற்றது.
    - ✓ நீரின் துணை தயாரிப்புகளைத் தாங்கும் .

# சர்வதேச நிகழ்வுகள்

## செயல்நுண்ணிய மற்றும் புத்தாக்க தொழில்நுட்பத்திற்கான திட்டம் (iCET-Initiative for Critical and Emerging Technology)- தொழில்துறை தலைமை நிர்வாக அதிகாரிகள் கருத்தரங்கு 2024 :

- இந்த வட்டமேசை கருத்தரங்கினை **இந்திய தொழில் கூட்டமைப்பு** (CII- Confederation of Indian Industry ) ஏற்பாடு செய்தது.
- இந்த வட்டமேசை கருத்தரங்கின் இரண்டு மெகா ஒப்பந்தங்கள்: **பாதுகாப்பு மற்றும் உயர்தர தொழில்நுட்பங்களில்** ஒத்துழைப்பு.
- iCET ஆனது மே 2022 இல் **இந்தியா மற்றும் அமெரிக்காவால்** அறிவிக்கப்பட்டது.
- இது அதிகாரப்பூர்வமாக **ஜனவரி 2023** இல் தொடங்கப்பட்டது.
- இரு நாடுகளின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலால் இது நடத்தப்படுகிறது.

https://t.me/ChinmayaTnpsc



CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
Academy which cares to be different
TNPSC Group I - க்கான
மாநில அளவிலான
இலவச மாதிரித் தேர்வுகள்
FREE MOCK TEST SERIES
Test 1 16 June 2024
Test 2 23 June 2024
Test 3 30 June 2024
Test 4 07 July 2024
Registration Must
Scan to register
OFFLINE
ONLINE
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
ANNA NAGAR WEST, CHENNAI - 600 040.
93605 31076 / 63838 61374



TNPSC
Group II/IIA
TEST SERIES
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
(Coaching for Civil Services - IAS, IFS, IPS, IRS etc.)
Academy which cares to be different
30 க்கும் மேற்பட்ட தேர்வுகள்
(Genaral Studies Tests -12,
Language Tests - 11,
Current Affairs Tests - 3,
Revision Tests - 7, Full Tests - 2)
4500 க்கும் மேற்பட்ட வினாக்கள்
தமிழ்நாடு பாடநூல்கள் மற்றும் TNPSC பாடத்திட்டம் சார்ந்து தேர்வுகள் நடைபெறும்
தேர்வுக்குப் பின் விரிவான விளக்கவுரை கொடுக்கப்படும்
Offline & Online
தேர்வுகள் தொடங்கும் நாள்
21.06.2024
நேரம்
10.00 AM - 01.00 PM
Test Discussion
02.00 PM - 05.00 PM
Scan to register
Join Us @
https://t.me/ChinmayaTnpsc
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
ANNA NAGAR WEST, CHENNAI - 600 040.
93605 31076 / 63838 61374
www.chinmayaias.com